உ

கடவுள் துணை.

உடலறிவிளக்கம்.

—(*)—

இஃது.

பிரமஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள்

ஸமஸ் கிருதத்தில்

திருவாய் மலர்ந்தருளியபடி

தமிழில்மொழிபெயர்க்கப்பட்டது.

ம-வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

பிடாரித்தாங்கல்.

நாராயணசாமிமுதலியா ரவர்கள்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னை-பிரம்பூர் குயப்பேட்டை 65-வதுநெ-வீ

உ

கடவுள் துணை.

உடலறிவிளக்கம்.

காப்பு.

விடமருந்தியமுர்தமுண்ட விமலநாதன்
விரிசடையன்மதிசூடி மழுமானேந்தி
இடமருவும்பரைபுதல்வ னறுமுகவ
னிளவலரிமருகனீ ராறுதோளன்
குடவயிறன்றனக்கிளைய குமரன்கந்தன்
குகனைமறவாம னெஞ்சமேபூண்டு
வுடலறியவிளக்கமென வுரைத்தேன்பாவுக்
குதவியருள்புரியுமயன் றேவிகாப்பாம்.

நூல்.

திக்குமனுபுகழுமறை சாத்திரங்கள்
சிறந்தசிதம்பரமேவு ஞானதேசி
பக்கமிருபுறமுமா ணாக்கர்சூழப்
பன்னிரண்டுசமயபத்துப் பல்லோர்வந்து
தர்க்கமிடுங்கனகசபை யருளுடையான்
சங்கராசாரியிரு தாள்பணிந்து

மிக்ககுருபரனேயைம் பூதமென்று
விளம்புவதையடியேற்கு விதிக்கவென்றான். க

மூந்தவுரைப்பது சரியை கிரியையோகம்
மூன்றினுக்குமெட்டாத ஞானபாதம்
வந்தவகைதனைவிலக்குந் தத்துவங்கள்
மாநிலத்தி லுரைப்பதுவுந்தொண்ணூற்றாறா
மந்தவகைதன்னிலைம் பூதமென்று
மண்டபிண்டப்படைத்துநிற்கு மதனைக்கேட்டாய்
யுந்தனக்குத்தெரியும்வகை விபரத்தோடு
முரைத்திடுவேனென்றுமகிழ்ந் துரைக்கலுற்றார். ()

பூதாதியென்னும்பெய ரஞ்சுண்டே தென்னிற்
பிருதிவப்புடன்றேயு வாய்வாகாயம்
ஆதாரமானமண் ணீர்நெருப்போ
டசைவானவாயுவெளி தன்பேரைந்தாஞ்
சூதானஞானவிந் திரியமைந்து
துய்யதொக்குசட்சுசிங்கு வையாக்கிராணந்
தீதானசோத்திரமிதன் விரிவுகேளாய்
சிறந்தசெவியுடம்புவாய் கண்மூக்காமே. ரு

உன்னவரிதான தன்மாத் திரையைக்கேட்பா
யுரைப்பர்சத்தபரிசமுடன் ரூபரசகந்தம்
என்னுமிவைதமிற்சத்தஞ் செவியிற்கேட்கு
மியற்பரிசமுடம்புசுக மறியும்ரூபங்

கண்ணுமுருக்காணும்ரச மினிப்பைக்காட்டுங்
கருதுகந்தம்நாசியினிற் கந்தங்காணுஞ்
சொன்னவகையைந்துமுயிர்க் கூறுமென்று
சொல்லுகன்மேந்திரியந் தானைந்துண்டே. ௪

உண்டுவிருத்திடும்வாக்குப் பாதம்பாணி
யொப்பரியபாயுருவென் றுபத்தமஞ்சாங்
கண்டுகொள்ளும்வாக்குவாய் திறத்தல்பாதங்
காணுமிருகால்பாணி கையதாகும்
விண்டுமுறைபாயுருக்கண் ஞணிபாகும்
விரித்தபடியுபத்தமென் பதுவேலிங்க
மென்றுமறிகரணமினி நான்குகேளா
யியம்புமனம்புத்தியாங் காரஞ்சித்தம். ௫

மனமானசெயனினைக்கும் புத்திவிசாரிக்கு
மகங்காரங்கொண்டெ ழுப்புஞ்சித்தமொன்றிவிக்கு
மினமானதத்துவமு வெட்டுக்கும்பேர்
மேதினியிலாத்துமதத் துவமுமென்பார்
கனமானபோக்கிய காண்டமென்றுங்
கருதியிடுவித்தியா தத்துவங்கேள்
தினமாயையோடழுந்தும் வித்தைகாலஞ்
செய்நியதிகலைராகம் புருடன்மாயை. ௬

வித்தையுமென்பதுவறிவுண் டாக்குவிக்கு
மெழிலானகாலமுக்கா லமுமறிக்கு

நித்தியகன்மாதிகளை நியதிக்கும்
நேரானகலையாண வத்தைநீக்கு
மற்றுமினிராகமிச்சை தனையுண்டாக்கி
மயக்குவிக்கும்புருடன்விட யத்தழுத்தும்
மெத்தவிசாரங்களிடு மாயையென்றும்
விளம்புசுத்தகாண்டமென்றும் விதித்தவாறே. ௭

காக்கரியசுத்தமெனு மீசுரந்தான்
கருதுசாதாக்கியஞ்சத்தி சிவமைந்தாகு
மேற்குமிதுதனிற்சுத்த மறிவுண்டாக்கி
யெழுப்பிவிடுங்கிரியைக்குறைந்திருக்குமென்றே
நோக்கரியவீசுரமுங் கிரியையுண்டாக்கு
நுவலுசதாக்கியஞானங் கிரியையுமொத்திருக்கு
தீர்க்கரியசத்தியெனுந் தத்துவங்கேள்
கிரியைசிவதத்துவமெய்ஞ் ஞானமாமே. ௮

சித்திதருதத்துவமீமோ ரைந்துதன்னைச்
சிவதத்துவங்கள்சுத்த தத்துவங்களென்று
முற்றுறையுமுட்கருவி முப்பத்தாறு
முரைத்தவகைவிபரமறிந் துணர்ந்தபோது
மற்றுமினிப்புறக்கருவி யிருபத்தைந்தும்
வகைவிபரத்தோடுமுனக் கருளிச்செய்வோம்
பத்தியுகனுகந்துமனக் கவலைநீக்கிப்
பரிவுடனேகேளுமெனப் பகரலுற்றார். ௯

புறக்கருவியென்றுரைத்த பெருமைகேணி
  பிருதிவியின்கூறுமயிர் தோலெலும்பு
மறைக்கவருமிறைச்சியுட னரம்பைந்தாகு
  மப்புவின்கூறுதிரமச்சை சுக்கிலந்தான்
சிறக்கவருமூளைநடு நீரோடைந்து
  தேவியுன்கூறுகாரம் பபஞ்சோம்பென்னுங்
குறைகவருநித்திரைமை துனங்களைந்துங்
  கூறினேம்புறக்கருவி யின்னுங்கேளே. ௰

வாயுவெனுங்கீறுகிடத் திடுதலோடன்
  மகிழ்ந்திருத்தனடத்தலுட னிருத்தலேந்தாங்
காயுகதிர்மேவு மாகாயக்கூறு
  காமமெனுங்குரோதமத லோபமோக
நீயுமறிபுறக்கருவி யிருபத்தைந்தும்
  நிகழ்த்தினேமினியுனக்குத் தெரியநன்றாய்
தேயுவெனுமக்கினியுண் டாக்கிவந்த
  தேசவாய்வுநின்றநிலை செப்புவோமே. ௰௧

பிலைத்துநிற்கும்பிராணனுட னபானன்வியானன்
  பிரியாதவுதானனுடன் சமானன்கூர்மன்
நலைத்துநின்றநாகனெழிற் கிரிகரனுமாகு
  நல்லகுணதேவதத்தன் றனஞ்சயன்பத்தாகு
மிலக்கமுடன்பிராணனிலை மூலமதிற்றோன்றி
  யெழுந்துசிரசளவுமுட்டி யிருவிழின்கீழாய்க்
கலக்கமறநாசிவழி யொடுமீராறிற்
  கடுகியெட்டுமுட்டுகுதக் கழியுமொருநான்கே. ௰௨

வாக்காதியென்பதொரு நான்குண்டென்பார்
வகுப்பதுகேள்குக்குமை சூக்காதிபேசும்
நீக்காய்பைசந்திகொஞ்ச வார்த்தைபேச
நெறியானமத்திமைமெத் தெனவும்பேசு
நோக்காய்வைகரிவினைகள் சவுரியங்க
ணொடிக்குமிவைதனையறியுங் குணமூன்றுண்டு
போக்காய்மனராசத னாங்காரனாகிப்
பொருந்தியிடுமமிர்தகுண முடையன்றானே. ௰௯

தாமதனென்பவன்மவுன மத்திமையாய்த்
தானிருப்பன்வெல்லரிது சாத்துவிகன்
தூமகன்றவமிர்தகுணத் துத்தமானாய்ச்
சொல்லுமாங்காரமூன் றாவதேது
காமவிழித்தைசதவாங் காரமென்றுங்
கணக்கறியாதேமுரண்டி யாங்காரிப்ப
னேமமறைவைகரியெல் லாமடக்கி
யிடறுகண்டுமுரண்டியாங் காரமாமே. ௨௰

பொருந்திநின்றபூதாதி யாங்காரந்தான்
பொங்கிவிசாரித்துமாங் காரங்கொள்வன்
திருந்தநம்மைப்பணிந்தமா ணாக்கனேகேள்
செப்புமென்றதத்துவங்க டொண்ணூற்றாறு
மருந்தமிழாலுரைத்தபடி கண்டுகொள்ளா
யன்புடையாயிந்தவகை தத்துவங்கள்
இருந்துவந்தவழித்தஞ்சு தானுமுண்டு
வினமறியாமாந்தரொடு மிணங்கொண்ணாதே. ௨௧

இணங்கவொண்ணுதென்ற மொழிகேட்டெழுந்து
விருகரமுங்கூப்பியடி பணிந்துமுக்கால்
வணங்கிமனமகிழ்ந்துவாய் புதைத்துநின்று
மனக்கவலைதீர்க்கவந்த ஞானதேசி
குணங்களொருமூன்றுடைய தத்துவங்கள்
கூறியதெல்லாமஞ்சிற் பிறந்ததேது
பிணங்கவறியாதகுரு பரனேயைந்தின்
பெருமைதெரிந்திடவுரையு மெனப்பணிந்தான். ()

ஓங்காரமுதலூமை தனிற்பிறக்கு
மொவ்வெழுத்திலீரெழுத்து முதித்துநிற்கும்
பாங்கானஉவ்வெழுத்தில் மவ்வுந்தோன்றும்
பகர்ந்தஅவ்வில்யவ்வெழுத்தும் வவ்வுந்தோன்றும்
நீங்காதசிவ்வெழுத்தில் மவ்வுந்தோன்றும்
நின்றமவ்வினவ்வெழுத்து நேராய்த்தோன்றுந்
தீங்கானதத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சிவாயநமவஞ்செழுத்திற் செனித்தவாறே. ௨௩

செனித்தவகைவிபரமுறைத் திட்டநாதா
செகம்புகழுமெய்ஞ்ஞான தேசிகாநீ
மனித்தவடிவாகியெனை யாளவந்த
வல்லவனேதத்துவங்க டொண்ணூற்றாறு
மினித்திருத்தமாகவஞ்சிற் பிரித்தடைத்து
வெழுத்தொன்றுக்கிவ்வளவென்றெனக்குத்தோன்
றத்,தொனித்திடுமென் றிருகரமுங்குவித்துவீழ்ந்தான்
றுய்யகுருபரனுமங் கேதுசொல்வார். ௨௪

புகலரியநவ்வெழுத்துப் பிருதிவாகும்
புதல்வனேயதிற்றந்த தத்துவங்க
ளகலிலமனவாக்குப்பாதம்பண்ணி
யடுத்தவெழிற்பாயுருவென் றுபத்தமேழாற்
மிகலுடையமயிரெலும்பு தோனரம்போ
டிறைச்சிசட்சுசிங்குவையாக் கிராணத்தொக்கு
சகலவெழிற்சோத்திரம்பை சந்திராசந்
தைசதவாங்காரமிவை யிருபதாமே. உரு

போதமனுமவ்வெழுத்து வப்பதாகும்
புத்திசுழுமுனையுமிரு கலைகாந்தாரி
சாதமெனுமத்திசிங்குவை யலம்புருடன்
சங்கினியென்குருமச்சை நீருதிரஞ்
சூதமெனுமூளைசுக் கிலந்தாமதஞ்
சூக்குமைவைகரியோடிவை யிருபதாகும்
நீதமெனுஞ்சிவ்வெழுத்துத் தேய்வாங்காரம்
நீயுமறிபூதாதியாங் காரமென்றே. உசு

வைகரிதுயென்பதுசோம்பு பயமாகாரம்
மைதுனநித்திரைசுத்த மீசுரந்தான்
மெய்கருதுசத்தி சிவஞ்சதாக்கியம்
விரும்புகின்றசாத்துவித மிவைமூவைந்தாம்
வையவறிவவ்வெழுத்து வாயுசத்தம்
பரிசமுன்ரூபரச கந்தமாகுந்
தூய்யவசனங்கமனந் தானத்தோடு
சொல்விசர்க்கமானந்த மத்திமையுமாமே. உஎ

ஒடுமுயிர்பிராணனுட னபானன்வியான
னுற்றகிரிகரனாகன் சமானன்கூர்ம
னீடுதனஞ்சயனுதவு தேவதத்த
னின்றவுதானன்கிடத்த னிறுத்தலோட
னாடுபுவிதனிலிருத்த னடத்தலோடு
நவிலுமிருபத்தேழு தத்துவங்க
டேடுமினியகாரமா காசந்தன்னிற்
சிறந்தவித்தைநியதிகலை ராகமெனும்புருடன். ௨௮

காலமெனுமாயைசித்த முலோபமோகங்
காமமெனுங்குரோதமதம் பதினாலாமே
பாலகனேநாமுரைத்த சிவாயவைந்திற்
பகுத்தவிடமிப்படிநீ பார்த்துக்கொள்வாய்
ஞாலமதிலெட்டெழுத்துத் தெய்வப்பேரை
நயந்தறியப்பேதையறிவில்லாரோடு
சாலவுறவன்றியிரு வென்றுஞான
சற்குருவுமுரைக்கமா ணாக்கன்சொல்வான். ௨௯

தத்துவங்களஞ்செழுத்திற் பிறந்தவாறுந்
தனித்தனியேபிரித்தெனக்குத் தெரியநன்று
யுய்த்துரைத்தபடிதெளிந்து விபரத்தோடு
மோரெழுத்துக்கவ்வளவென் றறிந்துகொண்டேன்
சித்தமகிழ்ந்தெட்டெழுத்துத் தெய்வப்பேரைச்
சிறக்கவுரைத்திடத்தயரு செவ்வாயென்று
மெய்த்தவனும்வருந்தியிரு கரங்குவித்து
மெல்லடியில்வீழ்ந்துவாய் புதைத்துநின்றான். ௩௰

நவ்வெழுத்துத்தெய்வமா ணுக்கனேகேள்
நான்முகனுமாகுமவ் வெழுத்துமேலாம்
சிவ்வெழுத்துருத்திரனு மாகுமென்றே
செப்புமகேசுரனுமவ் வெழுத்தேயாகும்
யவ்வெழுத்துச்சதாசிவனு மாகுமென்றே
யறைந்திடுவுவ்வெழுத்துவிந்து நாதமவ்வா
மோவ்வெழுத்துமகாமேரு வூமையெழுத்தானை
யொருநான்குவேதமறி யாதபரமாமே. ௩௧

போதமகிழ்ந்தெழுத்துகரங் குவித்துள்ளன்பாய்
பொற்பதத்தில்விழுந்துவாய் புதைத்துநின்று
வேதமறியாதபர மகமேருவெங்கே
விந்துநாதஞ்சதா சிவனுமெங்கே
சூதமகேசுரதேவ னுருத்திரனுமெங்கே
துலங்குதிருமாலயனுந் தானுமெங்கே
மாதவனேயென்பிறவி தீர்க்கவந்த
வல்லவனேசொல்லுகவென் றடிபணிந்தான். ௩௨

நின்றவழிபாடுமவ னிலையுங்கண்டு
நேசமுடன்மகிழ்ந்துகுரு வேதுசொல்வா
ரொன்றுகுறையாமனீ கேட்டதெல்லா
முன்னிடத்திலிருக்கிறதிங் கறிந்தாயில்லை
யின்றுதெரிந்திடவவற்றைக் கோணம்வீடு
விதளழுதுசத்திரமுதல் காட்டுவிப்போம்
நன்றுபெற்க்கேளுமா ணுக்காவென்று
நற்குருவுமனமகிழ்ந்தங் கேதுசொல்வார். ௩௩

அருந்தவஞ்செய்தவத்தாறி யாதவட்ட
மதற்குமிதழ்நா லுநடு வெழுந்தகம்பம்
திருந்தவுன்றன் சிரசுமுட்டிநிற்குமதைச்
சிறந்தமகமேருவெனக் காண்பாய்வீடு
பொருந்தவறிந்திடுவையடி மூலாதாரம்
புகழுகணபதிவல்ல வையைநோக்கி
யிருந்தவர்க்குமிகவாழ்வு வித்தைபுத்தி
யின்பசுகந்தருந்தெய்வப் பதியிதாமே. ௧௪

சொன்னதெய்வப்பதிக்குமே லுகோணஞ்
சுத்தியிழாறுமனே சுவாதிட்டான
மென்னவழங்கிடுந்துரியா தீதவீட்டில்
விளங்குசரஸ்வதிபிரமா வினையும்போற்றிப்
பன்னுமலரருச்சனைசெய் திருப்பவர்க்குப்
படியின்மனுத்தொழுமூன்று சம்பத்தோடு
மன்னர்கொலுவாகியுழு துண்டுவாழ
வரங்கொடுக்குந்தெய்வப் பதியிதாமே. ௧௫

அயன்பதிக்குமேற்பிறையின் கோணங்கண்டு
ரதனிதழீரந்துமணி பூரகந்தான்
சுயந்துரியவீடுபெறு லக்குமிகச்
சொந்தநெடுமாலடியில் வீழ்ந்துபோற்றப்
பயங்கிலேசம்மகன்று சயவீரமுண்டாய்ப்
பஞ்சகல்யாணசம் பன்னராகி
யுயர்ந்தகுடியாகிமிக வாழ்வளாய
னுதவியருள்புரிவர்தெய்வப் பதியிதாமே. ௧௬

பதிக்குமேலெழுந்த முக்கோணந்தன்னிற்
    பரந்தவிதழீராறு சுழுத்திவீடு
வுதிக்குமாரகதம்பெறுவ னுருத்திரன்று
    னுகந்தசத்திரித்திரியாள் பாதம்போற்றித்
துதிக்குமட்டதிக்குமஞிப் புகழ்ந்துவாழ்த்தச்
    சுத்தரணைசூரதுரைத் தனங்களுண்டாங்
கதிக்கமிகவாழ்வுபெறு மக்கள்சூழக்
    கனபவிழதருந்தெய்வப் பதியிதாமே. ௩௭

காட்டியவப்பதிக்குமே லாறுகோணங்
    கருதுமிதழ்பதினாறு விசுத்திவீடு
சூட்டியசொப்பனத்தினமயே சுரனிருந்தான்
    றுய்யமகேஸ்வரியிருவர் பாதம்போற்றிப்
பாட்டியல்புற்றுரைக்கவரு மன்னர்பக்கல்
    பாரதுரைத்தனம்பெறுவர் பாரின்மீதே
நீட்டியநற்சிவிகைகரி புரவிசூழ்ந்து
    நேசமுடன்வாழ்வார்தெய்வப் பதியிதாமே. ௩௮

பகரரியமகேசுரத்துக் கப்பால்வட்டம்
    பாருமிதழ்மூன்றுசாக் கிரமேவீடு
நிகரொருவரற்றசதா சிவனுமங்கே
    நின்றிலங்குமனோன்மணியோ டாக்கினைக்குட்
சகலரும்வந்தடிபணியக் கொலுவிருப்பன்
    சந்நிதியிலிருந்துதவஞ் செய்வாயாகிற்
செகமுழுதுமாளவரங் கொடுக்குந்தெய்வ
    சிகரமணியைத்தொழுதிறைஞ்சித் தரிசிப்பாயே. ()